**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 174/2019**

**வா.சா.2 – சிவகுமார்**

**<u>27–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 07.12.2003ம் தேதி பிறந்தேன். வழக்கு சொத்து எந்த காலையில் உள்ளது என்றால் 86/4ல் உள்ளது. எவ்வளவு ஏக்கர் என்றால் சரியாக தெரியாது. பத்திரத்தை நான் படித்துப்பார்தேனா என்றால் படித்துப்பாக்கவில்லை. வழக்கு எனது அப்பா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கிணறு எந்த காலையில் உள்ளது என்றால் 86/4ல் உள்ளது. மற்ற பூமி யார் யாருக்கு பாத்திப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும். சொத்து எங்கள் பூர்வீக சொத்து என்றால் தாத்தா பாட்டி கிரையம் வாங்கிய சொத்து. எந்த வருடம் கிரையம் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. எனது அப்பா 3ம் வாதி, 2ம் வாதி எனது சித்தப்பா.

2. எனது தாத்தாவின் பெயர் காலியப்ப கவுண்டர் என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டர் மகன் சுப்பிரமணியம் யார் என்றால் அவர் சி பாகத்தை சேர்ந்தவர். எங்களது பொது கிணற்றில் அவரும் ஓட்டுவார். 1ம் வாதிதான் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். பாலசுப்பிரமணியத்தின் தகப்பனார் பெயர் என்ன என்றால் பொன்னுசாமி. எங்கள் குடும்பம் பாலசுப்பிரமணியம் குடும்பம், 1ம் வாதி சுப்பிரமணியம் குடும்பம் தனித்தனி குடும்பம் என்றால் சரிதான். 14.11.1980ல் சொத்துக்களை பாகம்பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. அந்த பத்திரத்தை நான் படித்துப்பாக்கவில்லை.

3. பாகப்பிரிவினை பத்திரத்தில் சி பாகஸ்தர் பாலசுப்பிரமணியம், கிழபுறத்து பாம்பேரியிலும், மேல் புறத்து பாம்பேரியத்திற்கு ஏ பாகஸ்தரும், தென்புறமாக ஈ பாகஸ்தரரும் தனித்தனியாக ஆயில் இன்ஜின் வைத்துக்கொள்ளாம் என்று பத்திரத்தில் உள்ளது என்றால் தெரியாது. மூன்று பாகஸ்தரரும் தனித்தனியாகவோ, கூட்டாகவோ Electric Pump Set வைத்துக்கொள்ளலாம் என்று பத்திரத்தில் உள்ளது என்றால் பத்திரத்தில் உள்ள விபரம் தெரியாது. ஆனால் கூட்டாகதான் ஓட்டி வந்தார்கள். கிணற்றுக்கு தனித்தனியாக Oil Engine வைத்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பிரச்சினை மின் இணைப்பு பொறுத்துதான் என்றால் சரிதான்.

4. மின் இணைப்பு எண். 146 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மின் இணைப்பு எண். 146 பொன்னுசாமி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது இப்பிரச்சினைக்கு பின்னிட்டு மாற்றப்பட்டது. இந்த பிரச்சினை ஏற்பட்ட 06.06.2019 க்கு பின் மாற்றியுள்ளார்கள். பொன்னுசாமி பெயரில் உள்ள மின் இணைப்பை யார் யார் பெயருக்கு மாற்றியுள்ளார்கள் என்றால் முதலில் வேறு ஒருவர் பெயரில் இருந்தது, அதனை பொன்னுசாமி பிரச்சினைக்கு பிறகு மாற்றியுள்ளார். அந்த வேறு ஒரு நபர் பெயர் தெரியாது. வேறு ஒரு நபர் பெயரில் மின் இணைப்பு இல்லை என்றும், ஆரம்பம் முதல் பொன்னுசாமி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல.

5. மின் இணைப்பு கேட்டு எந்த ஆண்டு மனு கொடுக்கப்பட்டது என்றால் மனு கொடுக்கப்பட்ட ஆண்டு தெரியவில்லை 1988ம் ஆண்டு மின் இணைப்பு கூட்டாக வழங்கப்பட்டது. கூட்டாக வழங்கப்பட்டதாக சொல்வது பொய் என்றும், பொன்னுசாமி பெயருக்கு தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மூவரும் சேர்ந்து பணம் கொடுத்துதான் வாங்கியுள்ளார்கள். நான் பிறப்பதற்கு முன்பே மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. எனது அப்பா மற்றும்

தாத்தா சொல்லி மேற்படி விசயம் தெரியும். 221 மின் இணைப்பு சி. சுப்பிரமணியம் பெயரில் உள்ளது. அது பற்றி எனக்கு தெரியாது. அது 86/4 காலையில் உள்ளது. அது முதல் வாதியின் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. கூட்டாக பணம் கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் கூட்டாக பணம் கொடுத்தால்தான் 2019 வரை கூட்டாக ஓட்டி வந்தார்கள். அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. மின் கட்டண அட்டை யார் பெயரில் உள்ளது என்றால் மின் இணைப்பு ஒருவர் பெயரில் வழங்கப்பட்டால் அவர் பெயரில் தான் அட்டை வழங்கப்பட்டது. நான் மின் கட்டணம் கூட்டாக செலுத்தியதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் கூட்டா உள்ளதால் செலுத்திருப்பார்கள். அதற்காக ரசீதை நான் பார்த்தது இல்லை என்றால் பார்த்தது இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் ஒவ்வொரு பாகஸ்தருக்கும் தனித்தனியாக மின் இணைப்பு வைத்துக்கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளதன் அடிப்படையில் பிரதிவாதியின் தகப்பனார் தனியாக மனு கொடுத்து அவர் பெயரில் மின் இணைப்பை பெற்று தனியா அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. கூட்டாக அனுபவித்து வருகிறார். அதேபோல் முதல் வாதி சி.சுப்பிரமணியமும் இதே கிணற்றுக்கு 221 என்ற மின் இணைப்பு மூலம் மோட்டர் வைத்து தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல மின் இணைப்பு எண். 146 ல் கூட்டாகதான் உள்ளார்.

7. அவர் எந்த காலத்திலும் கூட்டாக இல்லை என்றால் சரியல்ல. எனது தரப்பில் என்னென்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியாது. எனது குடும்பத்திற்குள் 1980 ற்கு பின்னிட்டு ஏற்பட்டுள்ள பத்திரங்களில் பாலசுப்பிரமணியம், அவரது தகப்பனாரோ தரப்பினர் இல்லை என்றால் அது எனது தாத்தா பாட்டி சொத்து. அதில் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்பதால் அது

அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மின் இணைப்பை அபகரிக்கவேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.1 சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.27 16:00:30 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.